*Scan the code using 'e Courts Services' Mobile application downloaded from play store*

*S.C.No. 48/2026*

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிவகங்கை.
முன்னிலை : **நா.செந்தில் முரளி., B.Sc., M.L.,**
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், சிவகங்கை.

2026ம் ஆண்டு எப்ரல் மாதம் 20–ம் நாள் திங்கட்கிழமை

**அமர்வு வழக்கு எண்.48/2026**

**CNR No.TNSV02-000685-2026**

(திருப்பத்தூர், முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண். 19/2024, திருக்கோஷ்டியூர் காவல் நிலைய குற்ற எண்.19/2015)

–––––

குற்ற முறையீட்டாளர் : தமிழ்நாடு அரசு சார்பில்
காவல் ஆய்வாளர்
திருகோஷ்டியூர் காவல்நிலையம்
குற்ற எண். 19/2015

**/எதிர்/**

| | | |
|---|---|---|
| **குற்றம் சாட்டப்பட்டவர்** | : | 1. கருப்பையா (எ) சங்கர், த/பெ. ஆண்டியப்பன்.<br>2. மூக்கையா (எ) சின்னகருப்பன், **(Split up case)** த/பெ. ஆண்டியப்பன். |
| **குற்றம் சாட்டப்பட்டவர் மீதான குற்றச்சாட்டுகள்** | : | எதிரி – பிரிவுகள் 294(பி), 324. 427. 448 மற்றும் 506(2) இ.த.ச– வின் கீழும் மற்றும் பிரிவு 3, தமிழ்நாடு சொத்து (சேதம் மற்றும் இழப்பு தடுப்பு) சட்டம், 1992–ன் கீழும், |

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.04.20 14:54:40 +0530

| | | |
|---|---|---|
| **குற்றம் சாட்டப்பட்டவர் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுகள்** | : | எதிரி – பிரிவுகள் 294(பி), 324. 448 மற்றும் 506(2) இ.த.ச– வின் கீழும் மற்றும் பிரிவு இதச 427 உ/இ பிரிவு 3, தமிழ்நாடு சொத்து (சேதம் மற்றும் இழப்பு தடுப்பு) சட்டம், 1992–ன் கீழும், |
| **குற்றம் சாட்டப்பட்டவரின் வாதுரை** | : | குற்றவாளி இல்லை. |
| **நீதிபதியின் தீர்ப்பு** | : | எதிரி, பிரிவுகள் 294(பி), 324. 448 மற்றும் 506(2) இ.த.ச– வின் கீழும் மற்றும் பிரிவு இதச 427 உ/இ பிரிவு 3, தமிழ்நாடு சொத்து (சேதம் மற்றும் இழப்பு தடுப்பு) சட்டம், 1992–ன் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து, எதிரியை பிரிவு 235(1) குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம், 1973–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கின் பிணைமுறி ஆவணம் மேல்முறையீடு இருப்பின் மேல்முறையீட்டுக் காலத்திற்குப்பின் ரத்தாகவும் பிரிவு 452 கு.வி.மு.ச– வின் கீழ் உத்தரவிடப்படுகிறது. |

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.04.20 14:54:45 +0530

இவ்வழக்கு திருப்பத்தூர், முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண்.19/2024 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு பின்னர் இந்நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்யப்பட்டு, இந்த நீதிமன்றத்தின் முன்பாக 15.04.2026—ல் இறுதி விசாரணைக்காக வந்தபோது, இவ்வழக்கில் குற்ற முறையீட்டாளர் தரப்பில் கற்றறிந்த அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு.N.விவேகானந்தன், அவர்கள் முன்னிலையாகியும், எதிரியின் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.குனசேகரன், அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதுரைகளைக் கேட்டும், வழக்காவணங்களைப் பார்வையிட்டும், இது நாள் வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்தும், இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## தீர்ப்புரை

இந்த வழக்கின் எதிரி மீது பிரிவுகள் 294(பி), 324. 427. 448 மற்றும் 506(2) இ.த.ச— வின் கீழும் மற்றும் பிரிவு 3, தமிழ்நாடு சொத்து (சேதம் மற்றும் இழப்பு தடுப்பு) சட்டம், 1992—ன் கீழும், குற்றம் புரிந்ததாக குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.04.20 14:54:51 +0530

**2. குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:–**

இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் திரு.கருப்பையா, உலகினிப்பட்டியில் தனது மனைவியுடன் வசித்து வருவதாகவும், இந்நிலையில் கடந்த 28.12.2014ம் தேதி மாலை 5.30 மணியளவில் புகார்தாரரின் மனைவி திருமதி.ராக்கம்மாள், தனியாக வீட்டில் இருக்கும்போது இவ்வழக்கின் எதிரிகள் கைகளில் கத்தி, கடப்பாரை மற்றும் அருவாள் ஆகிய ஆயுதங்களுடன் வந்து, புகார்தாரரின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்தும், புகார்தாரரின் வீட்டின் அருகில் ஊன்றி இருந்த கற்கலை உடைத்தும், கம்பிவேலியை அறுத்தும், எதிரிகள் இருவரும் சேர்ந்து 10க்கு மேற்பட்ட வாழை மரங்களை வெட்டியும், தொடர்ந்து புகார்தாரரின் வீட்டின் அருகில் இருந்த பாத்ரூமை இடித்து சுமார் ரூ.1500/–மதிப்புள்ள சொத்துக்களை சேதப்படுத்தியும், சம்பவத்தை தடுக்க வந்த புகார்தாரரை பார்த்து தகாத வார்த்தைகளால் பேசி புகார்தாரரை மனஉளைச்சலுக்கு தள்ளியதாகவும், தொடர்ந்து இவ்வழக்கின் எதிரிகள் புகார்தாரரின் மனைவியை கட்டையால் அடித்து கொடுங்காயத்தை ஏற்படுத்தியும், தடுக்க வந்த புகார்தாரரரை எதிரிகள் அடித்து சிறுகாயத்தை ஏற்படுத்தியும், எதிரிகள் இருவரும் தங்கள் கைகளில் வைத்திருந்த அருவாள், கடப்பாரை ஆயுதங்களை காட்டி உன்னையும், உன் குடும்பத்தினரையும் கொல்லாமல் விடமாட்டேன் என மிரட்டி குற்றம்

N SENTHIL MURALI Digitally signed by N SENTHIL MURALI Date: 2026.04.20 14:54:57 +0530

புரிந்துள்ளதாக திருக்கோஷ்டியூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்களால் திருப்பத்தூர், முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** இவ்வழக்கில் கு.வி.மு.ச பிரிவு 207ன் கீழ் கடந்த 28.11.2025 தேதியன்று திருப்பத்தூர், முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் அரசு தரப்பு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் குற்றம் சாட்டப்பட்டவருக்கு இலவசமாக வழங்கப்பட்டது. பின்பு கு.வி.மு.ச. பிரிவு 209(அ) ன் படி திருப்பத்தூர், முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திலிருந்து கனம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு அங்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின் இந்நீதிமன்றத்திற்கு கடந்த 06.02.2026 தேதியன்று (Made Over) மாறுதலாகி, இந்நீதிமன்றத்தில் தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டது.

**4.** கு.வி.மு.ச பிரிவுகள் 226 மற்றும் 227ன் கீழ் இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, அரசு தரப்பு ஆவணங்களைப் பரிசீலனை செய்ததில் குற்ற அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள குற்றங்களை இவ்வழக்கு குற்றம் சாட்டப்பட்டவர் செய்திருக்கிறார் என்று

N SENTHIL MURALI Digitally signed by N SENTHIL MURALI Date: 2026.04.20 14:55:03 +0530

அனுமானிப்பதற்கு போதுமான முதல் நோக்கு ஆதாரம் வழக்கில் இருக்கிறது என்று தீர்மானித்து, கு.வி.மு.ச.பிரிவு 228ன் படி கடந்த 26.02.2026 தேதியன்று குற்றச்சாட்டுகள் வனையப்பட்டது. இவ்வழக்கின் எதிரி மீது பிரிவுகள் 294(பி), 324. 448 மற்றும் 506(2) இ.த.ச– வின் கீழும் மற்றும் பிரிவு இதச 427 உ/இ பிரிவு 3, தமிழ்நாடு சொத்து (சேதம் மற்றும் இழப்பு தடுப்பு) சட்டம், 1992–ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து அதனை எதிரிக்கு படித்துக்காட்டி விளக்கி கூறி வினவிய போது அதனை மறுத்து குற்றம் சாட்டப்பட்டவர் தான் குற்றவாளி இல்லை என்றும், வழக்கினை விசாரணை செய்ய வேண்டுமென கோரினர்.

**5.** அரசு தரப்பில் **அ.த.சா.1** முதல் **அ.த.சா.4** வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, **அ.த.சா.ஆ.1** முதல் **அ.த.சா.ஆ.4** வரையிலான ஆவணங்கள் அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்று பொருட்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.04.20 14:55:09 +0530

**6. அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம்:-**

அரசு தரப்பில் நிகழ்நிலை புகார்தாரர்/அ.சா.1/திரு.கருப்பையா, சம்பவத்தில் காயம்பட்ட சாட்சியான அ.சா.2/திருமதி.ராக்கம்மாள், சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியான அ.சா.3/திருமதி.கல்யாணி, ஆகியோர் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் அவர்கள் பிறழ் சாட்சிகளாக பாவிக்கப்பட்டு நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள்.

**6.1.** அ.சா.4/திரு.மதிவாணன், காவல் ஆய்வாளர் தனது சாட்சியத்தில், *"நான் திருநெல்வேலி விக்கிரமசிங்கபுரம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வளராக பணியாற்றி கட்டாய பணி ஓய்வு பெற்று தற்போது மதுரையில் குடியிருந்து வருகிறேன். நான் கடந்த 2015ம் வருடம் திருப்பத்துார் தாலுகா காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது 02.02.2015ம் தேதி திருக்கோஷ்டியுர் காவல்நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.ஜெயசங்கர், என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோத நிலைய மனு எண்.246/2015 மனுவை பார்வையிட்டு அந்த மனுவில் கண்டுள்ளபடி வழக்கின் புகார்தாரர் ஏரியூர் கிராமத்தை சேர்ந்த கருப்பையா மகன் கருப்பையா என்பவர் சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்த*

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.04.20 14:55:15 +0530

*புகார் மனுவின் அடிப்படையில் திருக்கோஷ்டியுர் காவல்நிலைய குற்ற எண்.19/2015 இதச பிரிவுகள் 294பி, 324, 448, 427, 506(2) மற்றும் பிரிவு 3 of TNPDDL Act–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை/**அ.த.சா.ஆ.2** பதிவு செய்துள்ளார். பின்பு புகாரையும் முதல் தகவல் அறிக்கையும் சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து வழக்கு கோப்பினை விசாரணைக்காக திருப்பத்துார் தாலுகா காவல் பொறுப்பு ஆய்வாளருக்கு அனுப்பி வைத்துள்ளார். திருப்பத்துார் தாலுகா காவல் ஆய்வாளர் ராஜசேகர் என்பவர் இவ்வழக்கினை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடம் சென்று மதியம் 2.00 மணியளவில் வழக்கின் சம்பவயிடத்தை சாட்சிகள் ஆதினமிளகி, மூர்த்தி ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர்/**அ.த.சா.ஆ.3** மற்றும் மாதிரி வரைபடம்/**அ.த.சா.ஆ.4** தயார் செய்துள்ளார். பின்பு சாட்சிகள் கருப்பையா, ராக்கம்மாள், கல்யாணி, மச்சக்காளை மற்றும் பார்வை மகஜர் சாட்சிகள் ஆதினமிளகி, மூர்த்தி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரியான கருப்பயைா என்ற சங்கரை அதே தினமான 02.02.2015ம் தேதி 16.00 மணியளவில் திருப்பத்துார் பேருந்து நிலையத்தில் வைத்து கைது செய்து நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். இத்துடன்*

*வழக்கு கோப்பினை நான் திருப்பத்தூர் தாலுகா காவல்நிலைய ஆய்வாளராக பொறுப்பேற்ற பிறகு எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகளை விசாரித்தபோது முந்தைய ஆய்வாளரிடம் கூறிய விபரங்களையே என்னிடம் கூறியதால் தனியாக சாட்சிகளின் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. சம்பவயிடம் குறித்தான பார்வைமகஜர், மாதிரி வரைபடம் சரியாக இருந்தது. இத்துடன் நான் வழக்கு விசாரணையை முடித்து 26.02.2015ம் தேதி இதச பிரிவுகள் 294பி, 324, 448, 427, 506(2) மற்றும் பிரிவு 3 of TNPDDL Act–ன் கீழ் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். எனது விசாரணையின்போதும், ஆய்வாளர் ராஜசேகர் விசாரணையின்போதும் அ.சா.1 முதல் 3 வரையானவர்கள் வழக்கு சம்பவம் குறித்து எனது விசாரணையின்போது வாக்குமூலம் அளித்துள்ளார்கள். (இவ்வழக்கின் அ.த.சா.ஆ.2 முதல் 4 வரையானவை அசல் ஆவணங்கள் அமர்வு வழக்கு எண். 215/2024 வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.)*" என்று சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.04.20 14:55:26 +0530

7. அரசு தரப்பு சாட்சியங்களில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு பாதகமாக கூறப்பட்ட சாட்சியங்கள் பற்றி குற்றம் சாட்டப்பட்டவரிடம் கு.வி.மு.ச.313(1)(ஆ) பிரிவின் படி கடந்த 15.04.2026 தேதியன்று வினவியபோது குற்றம் சாட்டப்பட்டவர் அரசு தரப்பு சாட்சியங்கள் பொய் சாட்சிகள் என்றும், தங்கள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் தெரிவித்துள்ளார். எனவே, குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது.

**8. பிரச்சனை:**

இந்த வழக்கில் தீர்வு காணப்படவேண்டிய சங்கதி யாதெனில் எதிரி மீது பிரிவுகள் 294(பி), 324. 448 மற்றும் 506(2) இ.த.ச– வின் கீழும் மற்றும் பிரிவு இதச 427 உ/இ பிரிவு 3, தமிழ்நாடு சொத்து (சேதம் மற்றும் இழப்பு தடுப்பு) சட்டம், 1992–ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**9. பிரச்சனைக்கு தீர்வு:–**

அரசுத்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும்போது, இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சிகள் பிறழ்சாட்சிகளாக பாவிக்கப்பட்டிருந்தாலும் புகார் கொடுப்பதில் காலதாமதம் ஏற்படவில்லை. முறையாக புலன்விசாரணை செய்யப்பட்டுள்ளது,

குற்றம் சாட்டப்பட்டவர் குற்றச்சம்பவத்தில் ஈடுப்பட்டுள்ளார் என்பதை புலன்விசாரணை அலுவலர் தனது சாட்சியத்தில் தெளிவாகச் கூறியுள்ளார். எனவே, குற்றம் சாட்டப்பட்டவர் மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் போதுமான சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக ஐயத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே குற்றம் சாட்டப்பட்டவருக்கு தக்க தண்டனை வழங்கவேண்டும் என்று வாதிட்டார்.

**10.** இதற்கு குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர், இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சிகள் அனைவருமே பிறழ் சாட்சிகளாக பாவிக்கப்பட்டுள்ள நிலையிலும், நிகழ்நிலை புகார்தாரர்/அ.சா.1/திரு.கருப்பையா, சம்பவத்தில் காயம்பட்ட சாட்சியான அ.சா.2/திருமதி.ராக்கம்மாள், சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியான அ.சா.3/திருமதி.கல்யாணி, ஆகியோர் தங்களது சாட்சியங்களில் இந்த வழக்கின் எதிரியின் குற்றச்செயல்கள் குறித்து எதுவும் கூறாத நிலையிலும், குற்றம் சாட்டப்பட்டவர் மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்று வாதிட்டார்.

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.04.20 14:55:37 +0530

**11.** இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர்/அ.சா.1/ திரு.கருப்பையா, தனது சாட்சியத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்.

*"நான் உலகினிப்பட்டியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். சாட்சி ராக்கம்மாள் எனது மனைவி. சாட்சி கல்யாணி எனது தங்கை.* ***ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது.*** *சுமார் 12, 13 வருடங்களுக்கு முன்பு எனது வீட்டிலிருந்து வாழை மரங்கள், கற்கால்கள் ஆகியவை சேதமாகிவிட்டது.* ***சேதப்படுத்தியது யாரென்று தெரியாததால் நான் மாவட்ட கண்காணிப்பாளரிடம் புகார் மனு கொடுத்தேன். நான் ஆஜர் எதிரியை குறித்து புகார் ஏதும் போலிசாரிடம் கூறவில்லை.*** *எதிரி பக்கத்து வீட்டுக்காரர் என்பதால் அவரை விசாரிக்கும்படி கூறினேன். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனுவின் நகல் நான் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்தது தான். அந்த புகார் மனு/***அ.த.சா.ஆ.1** *ஆகும். (அசல் புகார் மனு இந்நீதிமன்ற அமர்வு வழக்கு எண்.215/2024 வழக்கில் உள்ளது) போலிசார் வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்".*

N SENTHIL MURALI Digitally signed by N SENTHIL MURALI Date: 2026.04.20 14:55:43 +0530

**11.1.** இவ்வழக்கின் சம்பவத்தில் காயம்பட்ட சாட்சியான அ.சா.2/திருமதி.ராக்கம்மாள், தனது சாட்சியத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்.

*"நான் உலகினிப்பட்டியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 கருப்பையா எனது கணவர். சாட்சி கல்யாணி எனது நாத்தனார். **ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது.** சுமார் 10, 11 வருடங்களுக்கு முன்பு எனது வீட்டிலிருந்து வாழை மரங்கள், கற்கால்கள் ஆகியவை சேதமாகிவிட்டது. **சேதப்படுத்தியது யாரென்று தெரியாததால் எனது கணவர் அ.சா.1 கருப்பயைா மாவட்ட கண்காணிப்பாளரிடம் புகார் மனு கொடுத்தார்.** எதிரி பக்கத்து வீட்டுக்காரர் என்பதால் அவரை விசாரிக்கும்படி என் கணவர் கூறினார். போலிசார் வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்".*

**11.2.** இவ்வழக்கின் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியான அ.சா.3/திருமதி.கல்யாணி, தனது சாட்சியத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்.

*"நான் உலகினிப்பட்டியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 கருப்பையா எனது அண்ணன். அ.சா.2 ராக்கம்மாள் அண்ணன் மனைவி. **வழக்கு சம்பவம்***

***பற்றி எனக்கு எந்த விபரமும் தெரியாது. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது.*** *போலிசார் வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்".*

**12.**இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் அ.சா.1/திரு.கருப்பையா, மற்றும் இவ்வழக்கின் சம்பவத்தில் காயம்பட்ட சாட்சியான அ.சா.2/திருமதி.ராக்கம்மாள், இவ்வழக்கின் எதிரி தான் தங்களை அடித்து தாக்கினார்கள் என்றும், தங்களது வீட்டில் இருந்த வாழை மரங்களை கற்களால் எதிரி தான் சேதப்படுத்தினார் என்பது பற்றியும் தனது சாட்சியத்தில் எந்தவொரு பொருண்மையையும் குறிப்பிட்டு சொல்லவில்லை. மேலும், இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர்/அ.சா.1/திரு.கருப்பையா, சம்பவத்தில் காயம்பட்ட சாட்சியான அ.சா.2/திருமதி.ராக்கம்மாள், சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியான அ.சா.3/திருமதி.கல்யாணி, ஆகியோரும் தங்களது சாட்சியத்தில் எதிரியின் குற்றச்செயல்கள் குறித்து எதுவும் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. மேலும், நிகழ்நிலை புகார்தாரர்/அ.சா.1/திரு.கருப்பையா, சம்பவத்தில் காயம்பட்ட சாட்சியான அ.சா.2/திருமதி.ராக்கம்மாள், சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியான அ.சா.3/திருமதி.கல்யாணி, தங்களது சாட்சியத்தில் இவ்வழக்கு தொடர்பாக தங்களுக்கு எந்தவொரு சங்கதியும் தெரியாது

என்றும், எதிரியை தங்களுக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளனர். மேற்படி அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.3 சாட்சிகள் அரசு தரப்பில் பிறழ்சாட்சிகளாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளபோதும், அவர்கள் அரசு வழக்கிற்கு ஆதரவாக எந்தவொரு சங்கதியையும் தங்களது சாட்சியத்தில் குறிப்பிடவில்லை.

**13.** அரசு தரப்பில் இவ்வழக்கினை புலன் விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்த காவல் ஆய்வாளர் அ.சா.4/திரு.மதிவாணன், காவல் ஆய்வாளர், என்பவரின் சாட்சியத்தை மட்டும் வைத்து குற்றம் சாட்டப்பட்டவர் குற்ற செயலில் ஈடுபட்டார் என்று தீர்மானிக்க இயலாது. எனவே, எதிரி மீது பிரிவுகள் 294(பி), 324. 448 மற்றும் 506(2) இ.த.ச– வின் கீழும் மற்றும் பிரிவு இதச 427 உ/இ பிரிவு 3, தமிழ்நாடு சொத்து (சேதம் மற்றும் இழப்பு தடுப்பு) சட்டம், 1992–ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தகுநிலை ஐயத்திற்கு அப்பால் அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**14. இறுதியாக,**

எதிரி, பிரிவுகள் 294(பி), 324. 448 மற்றும் 506(2) இ.த.ச– வின் கீழும் மற்றும் பிரிவு இதச 427 உ/இ பிரிவு 3, தமிழ்நாடு சொத்து (சேதம் மற்றும் இழப்பு தடுப்பு) சட்டம், 1992–ன் கீழ் குற்றவாளி

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.04.20 14:56:02 +0530

இல்லை என்று தீர்மானித்து, எதிரியை பிரிவு 235(1) குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம், 1973–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கின் பிணைமுறி ஆவணம் மேல்முறையீடு இருப்பின் மேல்முறையீட்டுக் காலத்திற்குப்பின் ரத்தாகவும் பிரிவு 452 கு.வி.மு.ச–வின் கீழ் உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் ஏதும் தாக்கல் செய்யப்பட்வில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20–ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.04.20 14:56:08 +0530

**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**சிவகங்கை.**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>:**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | திரு.கருப்பையா | நிகழ்நிலை புகார்தாரர்/ சம்பவத்தை நேரில் பார்த்தது பற்றி கூறுகிறார். |
| அ.சா.2 | திருமதி.ராக்கம்மாள் | சம்பவத்தில் காயம்பட்ட சாட்சி |
| அ.சா.3 | திருமதி.கல்யாணி | சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி |
| அ.சா.4 | திரு.மதிவாணன் | காவல் ஆய்வாளர்/ புலன் விசாரணை செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது பற்றி கூறுகிறார் |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>:**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் மனு | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.4 |
| அ.சா.ஆ.3 | பார்வை மகஜர் | அ.சா.4 |
| அ.சா.ஆ.4 | மாதிரி வரைபடம் | அ.சா.4 |

**<u>அரசு தரப்பு பொருள் சான்று:</u>** இல்லை.

**<u>எதிரியின் தரப்பு சாட்சி:</u>** இல்லை.

**<u>எதிரியின் தரப்பு சான்றாவணங்கள்:</u>** இல்லை.

**<u>எதிரியின் தரப்பு பொருள் சான்று:</u>** இல்லை.

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.04.20 14:56:13 +0530

**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்**

**சிவகங்கை.**